# 'கிறின்லேஸ்' வங்கியில் தீ: ரூ. 100 கோடி நஷ்டம்!

பக்கங்கள் 8

ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 புரட்டாதி 20 ஜூல்-கஃ 25 இதழ் 237

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA · JAFFNA CAMPUS
RECEIVED
1980-10-6
PERIODICALS DIVISION

(கொழும்பு)

கொழும்புக் கோட்டையிலுள்ள நாஷனல் அன்ட் கிறின்லேஸ் வங்கியில் ஏற்பட்ட தீ விபத்தில் வங்கியின் பெரும் பகுதி எரிந்து சாம்பலாகியது!

இத் தீ விபத்தினுல் சுமார் 100 கோடி ரூபா சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இத் தீ; 11 மணித்தியாலங்களின் பின்னர் நேற்றுக் காலைதான் முற்ருக அணைக்கப்பட்டது.

இத் தீ விபத்தின்போது வங்கியிலிருந்த பதிவேடுகளில் ஒரு பகுதி மட்டுமே சேதமடைந்துள்ளபோதிலும் பணமும் நகைகளும் பாதுகாப்பாக இருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# உலக வங்கியின் உதவியுடன்

# யாழ். மாவட்ட அபிவிருத்தி!

## யாழ். விவசாயிகளின் குறை விரைவில் தீர்க்கப்படும்

### மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் அமைச்சர் காமினி

(யாழ்ப்பாணம்)

''வெங்காயம்,' மிளகாய் இறக்குமதி காரணமாக யாழ்ப்பாண விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பை நான் உணர்கின்றேன். இது சம்பந்தமாக வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடம் விபரமாகக்கூறி, யாழ்.விவசாயிகள் திருப்தி அடையும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ள முழு முயற்சி எடுப்பேன்'' என்று அமைசசர் திரு. காமினி திஸ நாயக்கா உறுதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும் என்றும் அமைச்சர் காமினி நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற யாழ். மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் பேசுகையில் தான் அமைச்சர் காமினி திஸநாயக்கா மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரச அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமி, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்.யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராஜலிங்கம்,பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில்; யாழ் மாவட்ட அபிவிருத்தி, யாழ் விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு கஷ்டங்கள்குறித்து கலந்துரையாடப்பட்டது.யாழ் விவசாயிகளின் பிரச்னைகள்பற்றி எம். பிக்கள் தெளிவாக விளக்கினர்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா தொடர்ந்து பேசுகையில்; ''மிளகாய், வெங்காயம் இறக்குமதியினுல் யாழ்விவசாயிகள் அடையும் பாதிப்பை நான்வெகுவாக உணர்கிறேன். பிரச்னைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன். இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்து பேசி தீர்க்கமான முடிவு எடுப்பேன். இந்த முடிவு நிச்சயமாக யாழ். விவசாயிகளுக்கு திருப்தியை அளிக்கும் என்றுநம்புகிறேன்'' என்று கூறினர்.

யாழ். அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி நன்றி தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2-30மணியளவில் அமைச்சர் காமினி, ஹெலிக்காப்டர் மூலம் கொழும்பு திரும்பினர்.

## யுத்த நிலைமை

லண்டன், அக் 5

ஈரான்—ஈராக் யுத்தம் பதினென்காவது நாளாக இன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

ஈராக் யுத்த விமானங்கள் இன்று பிற்பகல், ஈரானின் தலைநகரமான தெஹ்ரானின் மேற்குப் பகுதியிலிருக்கும் விமான நிலையத்தை தாக்கின.

ஈரான் வானெலிச் செய்திகளின்படி, தாக்குதலில் சுடுபட்ட ஈராக் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன எனத் தெரியவருகிறது.

நிலைமை இவ்வாறு இருக்க; ஈராக்கின் தலைநகரான பாக்தாத் இன்றும் ஈரான் விமானத் தாக்குதலுக்குள்ளானது. ஆனுலும், பாக்தாத்தில் வாழ்க்கை வழமைபோலிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நற்சேவையை நாடு மறக்காது!

### ஜனதிபதி இரங்கலுரை

(கொழும்பு)

'நாட்டுக்கும் மக்களுக்கும் நற்சேவை புரிந்த நல்லதொரு நண்பனை நாம் இழந்து நிற்கிறோம்' என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுதந்திர சதுக்கத்தில் நேற்று மாலை நடைபெற்ற சேர் ஜோனின் இறுதிச் சடங்குகளைத் தொடர்ந்து நிகழ்த்திய இரங்கலுரையில்தான் ஜனதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டுக்குச் சேவையாற்றிய ஒருவரை இப்பொழுது இழந்து நிற்கின்ருேம். நாட்டுக்கு நற்சேவை புரிந்த சேர் ஜோனை நாடு ஒருபொழுதும் மறக்காது. வாழ்க்கையை அவர் பூரணமாக அனுபவித்தவர்; சுவைத்தவர்'' என்றும் ஜனதிபதி தமது இரங்கலுரையில் தெரிவித்தார்.

## சேர். ஜோனின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்!

(கொழும்பு)

முதுபெரும் அரசியல் தலைவரும், இலங்கையின் மூன்ருவது பிரதமரும், வரலாற்று நாயகனுமான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலையின் பூதவுடல்; நேற்றுமாலை சுதந்திர சதுக்கத்தில் அக்கினியுடன் சங்கமமாகியது.

சேர் ஜோனின் பூதவுடல்; பூரண அரச இராணுவ மரியாதைகளுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது. அவரது மருமக்களான கலாநிதி காமினி கொரியா, திரு. லலித் கொத்தலாவலை ஆகிய இருவரும் பீரங்கிக் குண்டுகள் முழங்க அமரரின் சிதைக்குத் தீமூட்டினர்.

கந்தாவளையிலுள்ள அமரரின் இல்லத்திலிருந்து நேற்றுக் காலை பாராளுமன்றக் கட்டிடத்துக்கு பூதவுடல் எடுத்துவரப்பட்டது. பாராளுமன்றத்துக்கு பூதவுடல் கொண்டுவரப்பட்ட போது மக்கள் வழி நெடுகிலும் நின்று கண்ணீர் மல்க அஞ்சலிசெலுத்தினர். பாராளுமன்றத்திலும் பெருந்தொகையான மக்கள் அஞ்சலிசெலுத்தினர். அங்கு காணப்பட்ட கியூவரிசையின் முடிவை காணவே முடியவில்லை.

பிற்பகல் இரண்டு மணியளவில் பூதவுடல் சுதந்திர சதுக்கத்தை நோக்கிப் புறப்பட்டது. வீதிகள் எங்கும் மக்கள் சோகமே உருவாகக் காட்சி தந்தனர். அமரருக்கு முன்னர் பதவிவகித்த இரண்டு பிரதமர்களும் தகனம்செய்யப்பட்ட அதே இடத்திலேயே அமரரின் பூதவுடலும் தகனம்செய்யப்பட்டது.

## ஆயுதம்தரித்த நால்வர் சிகரட்வானை மறித்து ரூபா 14,000 கொள்ளை!

(வவனியா நிருபர் பி. மாணிக்கவாசகர்)

செட்டிகுளத்திலிருந்து வவனியா வந்துகொண்டிருந்த சிகரெட் விற்பனை வான் ஒன்று ஆயுதம் தரித்த இளைஞர்களால் பட்டப்பகலில் வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

(விபரம் 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வைத்தியம்

சகலவிதமான ரோகங்களுக்கும் விசேஷமாக முறிவு, பழம் நோக்களுக்கும் சிகிச்சையளிக்கப்படும். டாக்டர் செ. சிவநேசன், நாயன்மார்காடு ஆயுர்வேத வைத்தியசாலை, நவீன சந்தைக்கு முன்பாக, 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6569

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்டு இன்னும் பதிவுசெய்யப்படாத சிறந்த மினிபஸ் (26 ஆசனங்கள் கொண்டது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க:- பொ. பாலசுந்தரம் 'விதானை வளவு, தொண்டைமானாறு. 7000

டாக்டரின் பாவிப்பில் உள்ள புத்தம் புதிய 82 சிறி (Vespa P 150 X) ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 'அம்பாள் வாசம்', உடுவில் மேற்கு, சுன்னாகம். 7004

## தேவை

20 வயதிற்குட்பட்ட படித்த மாணவர்கள் விற்பனையாளராகப் பணிபுரியத் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். ஞான சுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 7002

**WANTED**

Reference Advertisement No: 6959 of 2nd October 1980 The date calling applications has been extended till 10th October 1980 Visiting Security Officer, Marine & Field Security Services Ltd, Kalviangkadu, Jaffna 6998

## உளவு: 15 பேருக்கு தூக்கு

தெஹ்ரான், அக். 5

ஈராக்-ஈரான் யுத்தத்தில் ஈராக்குக்காக, ஈரானில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட 15 ஈரானியர் தூக்கில் இடப்பட்டனர் எனத் தெஹ்ரான் செய்திகள் தெரிவித்தன. (இ)

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணப் பட்டினம் என்னும் இடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற சுகிர்தரத்தினம் கதிரவேலு என்பவரினது மரணசாதனத்திலும், எழுத்தாவணத்தின் விடயத்திலும்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இலக்கம்: T / 3563

கதிரவேலு புவனேந்திரன், 118, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்,

தற்பொழுது 71 அ, சிங்கப்பூர்-10.

இவரின் தத்துவகாரன் சங்கரப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை 21, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்

1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

6973

## பெயர் மாற்றம்

நல்லூரைச் சேர்ந்த செல்வன் முருகேசு-ஆதிநாராயண ஈஸ்வரன் ஆகிய நான் (06-10-1980) இன்று தொடக்கம் செல்வன் முருகேசு- பிரதீப் குமார் என்று எனது பெயரை மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

எம். பிரதீப்குமார்
7006

## த. இளைஞர் பேரவையின் மாநாடு

(நெல்லியடி)

தமிழ் இளைஞர் பேரவையின் மாநாடு அடுத்த வருடம் மார்ச் மாதம் மட்டக்களப்பில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாநாட்டிற்கான ஏற்பாடுகளை பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. மாவை சேனாதிராசா கவனித்து வருகின்றார் மாநாட்டின் முன்பு அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் பேரவைக்கிளைகள் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகள் தோறும் அமைக்கப்படும். (கு)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில், காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தம்பிமுத்து என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

தம்பிமுத்து கைம்பெண் நேசமலர், காங்கேசன்துறை வீதி, கோண்டாவில்

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல; 3557

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் நாளாகியஇன்று திகதியிடப்பட்டது. 6979

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 20- ம்திகதி

(திங்கட்கிழமை)

(6 - 10 - 1980)

மேடம்: உறவினர்கள் உதவிக்கு வருவார்கள், வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும், காதலர் வாழ்க்கையில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இடபம்: வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள், தொழிலில் உற்சாகம் பிறக்கும், வாகன சுகமும் பொருள் வரவிற்கும் இடமுண்டு.

மிதுனம்: சகோதரபாசம் தலைதூக்கும், கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு. துணிவையே துணையாகக் கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள், பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும்.

கடகம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும், வாகனம் செலுத்துவோர் கவனமாக இருக்கவும், பிரயாணத்தின்போது பொருள் நழுவக் கூடும், தொழில்புரியும் [illegible]த்தில் பொறுமை வேண்டும்.

சிங்கம்: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும், புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும், உம்மிடம் உதவிபெற்றவர்களே இன்று கையை விரிப்பர். விழிப்புடன் இருக்கவும்.

கன்னி: இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள், பொருள் வரவிற்கும் இடமுண்டு, சுற்றாடலில் மதிப்பு உயரும், பெரியவர்களே உங்கள் ஆலோசனைகளைக்கேட்க முன்வருவார்கள், இறை அருளும் உண்டு.

துலாம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும், விவசாயிகளுக்கு ஏமாற்றத்திற்கு இடமுண்டு.

விருச்சிகம்: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு, மனம்போல் யாவும் நடக்கும் இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும், வாகன சுகமும் உண்டு.

தனுசு: இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும், இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும், அறவழி நாட்டத்திற்கும் இடமுண்டு.

மகரம்: எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும், வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும், சிந்தனையில் குழப்பநிலை தோன்றும், வீட்டிலும் சிறிய பூசலுக்கும் இடமுண்டு.

கும்பம்: கவர்ச்சிகரமான தினம், காதலர்கள் இன்பத்தில் மிதப்பர், கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும், களஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும்.

மீனம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும், வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம், பொருட்செலவும் உண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை

**க. வேலுப்பிள்ளை**

## கிராம சேவகருக்கு அனுதாபம்

(நெல்லியடி)

வடமராட்சி வடகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவகர்களின் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காலஞ்சென்ற கிராம சேவையாளர் திரு. கோமஸ்கந்தாவுக்கு அநுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (கு)

## CD 125 கொண்டா மோட்டார் சைக்கிள்கள்

யப்பானில் திருத்தி அமைக்கப்பட்டவை சகாயவிலையில் விற்பனைக்குண்டு.

**மாலதி மோட்டோர்ஸ்**

வதிரி ரோட் — நெல்லியடி. (7001)

## சுன்னாகம் பட்டணசபை

# கேள்விப்பத்திர அறிவித்தல் - 1981

சுன்னாகம் மீன் சந்தையில் 01-01-1981 தொடக்கம் 31-12-1981 வரையிலான சாலப்பகுதியில், கீழ்க்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் 1980-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி வரையும் விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரம் கீழ்க் குறிப்பிடப்படும் விபரங்களின்படி பிணைப்பணமும், கேள்விப்பத்திரப் பணமும் செலுத்தி 22-10-80-ந் திகதி புதன்கிழமை பகல் 12-15 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| கடை இல. | வியாபாரத்தின் தன்மை | பிணைப்பணம் | கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| மீ. 1 | மாட்டிறைச்சிக்கடை | 300-00 | 25-00 |
| மீ. 2 | ஆட்டிறைச்சிக்கடை | 200-00 | 15-00 |
| மீ. 3 | கருவாட்டுக்கடை | 100-00 | 10-00 |
| மீ. 4 | கருவாட்டுக்கடை | 100-00 | 10-00 |
| மீ. 5 | கருவாட்டுக்கடை | 100-00 | 10-00 |
| மீ. 6 | கருவாட்டுக்கடை | 100-00 | 10-00 |
| மீ. 7 | கருவாட்டுக்கடை | 100-00 | 10-00 |
| | உமல், கடதாசி, ஆகியன விற்பனை செய்தல் | 100-00 | 10-00 |

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்.
1-10-1980.

**பொ. பாலசிங்கம்,**
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டணசபை.
7005

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 38

கந்தப்பு சுப்பிரமணியம்,
மருதடி, காரைநகர் வடக்கு, காரைநகர்.

வழக்காளிகள்

எதிராக

சுப்பிரமணியம் நாகரத்தினம் கைம்பெண் லீலாவதி தனக்காகவும் காரைதீவு மேற்கு, பயறிக்கூடல் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகரத்தினத்தின் ஆதனங்களின் சட்டபூர்வமான பிரதிநிதியாகவும் பயறிக்கூடல், காரைநகர் மேற்கு, காரைநகர்.

எதிராளி

ஊர்காவற்றுறை டிஸ்திறிக் கோட்டின் M B 38-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 8735-ம் 15-6-78 தொடக்கம் 1-3-79 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 20% வீதம் வட்டியும் அதன்பின் முழுத்தொகை இறுக்கும்வரை 5% வீதம் வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 687 சதம் 30.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை மாவட்ட நெ. பர, (15) பதினைந்து எல்லை கிழக்கு கந்தையா கணேசுவுக்கும் அருளானந்தம் பெண் திலகவதிக்குரிய ஆதனங்கள், வடக்கு கனகசபை பெண் சின்னம்மாவின் ஆதனம், மேற்கு பொன்னம்பலம் பெண் சிவபாக்கியத்தின் ஆதனம், தெற்கு முருகேசு பெண் அமிர்தவல்லியின் ஆதனம் இதடங்கலும் இதன் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழமையான இறைவாய்க்கால் பாவிப்புரித்தும் ஆனால் வடக்கெல்லைக் காணிக்குரிய இறைவாய்க்கால் வழிப் பாவிப்புரித்து பிறநீங்கல்.

**சி. சோ. நரசிங்கம் ஜே. பி.,**
நீதிமன்ற விற்பனையாளரும் பதிப்பாளரும்.

தொல்புரம்,
-[illegible]-80.

7003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை நிறுத்த ஈராக் யோசனை:

# 'படைபலத்தை கூட்டும்முயற்சி'

## ஈரான் அறிவிப்பு

நியூயோர்க், அக். 5

ஈரானியத் துருப்புக்கள் துப்பாக்கிகளால் சுடுவதை உடனடியாக நிறுத்துவார்களானல் யுத்தத்தை எட்டாம் திகதி வரை நிறுத்த தாம் தயார் என்று ஈராக் வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஈராக் தான் இழந்துள்ள இராணுவ வலிமையை மீண்டும் பெறுவதற்காகவே இந்த யோசனையைத் தெரிவித்துள்ளது என்று குற்றம் சாட்டிய ஈரானிய ஜனதிபதி, ஈராக்கின் யுத்த நிறுத்த யோசனையைப் புறக்கணித்துள்ளார்.

### வெளிநாடுகளிடம் உதவிபெறவில்லை

அரபு நாடுகளிடமோ, சோவியத் யூனியனிடமோ இருந்து எந்தவொரு உதவியையும் ஈராக் பெறவில்லையென்று ஈராக் வெளியுறவுஅமைச்சர் சத்தாம் அமாரினி ஐ.நா. தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

### அயல்நாடுகளிடம் ஈராக் பாதுகாப்பு

''ஈராக் விமானப்படையின் விமானங்கள் சில பாதுகாப்புக்காகவே அயலிலுள்ள நட்பு நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன'' என்றும் ஜனுப் அமாரினி கூறினர்.

### ஐ.நா.தீர்மானத்தை ஈரான் நிராகரிப்பு

இதே வேளையில் ஈரானிய மண்ணிலிருந்து ஈராக் துருப்புக்கள் வெளியேறும் வரை ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ஏற்கமுடியாதென்று ஈரானிய ஜனதிபதி பாணி சதார் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

### ஈராக் துருப்புக்கள் துரத்தியடிப்பு

ஈரானின் பிரதான துறைமுகநகரமான கொரம்ஷா நகரை ஈராக் கைப்பற்றிவிட்டதாக வெளிவந்த செய்தியை மறுத்த தெஹ்ரான் வானெலி அங்கிருந்து ஈராக் துருப்புக்கள் துரத்தப்பட்டு விட்டதாக அறிவித்துள்ளது. (கு)

## "ஜனதா அரசே காரணம்"

புதுடில்லி, அக். 5

''அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி அதிகரிப்பு, வட கிழக்கு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை என்பவற்றுக்கு முந்திய அரசாங்கம்தான் காரணம்''.

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. வி. பாட்டே நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில்குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நற்பெயரையும் அமைதியையும் குலைக்க சில தீய சக்திகள் முயன்று வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர் வட கிழக்கு மாநிலங்களின் பிரச்னையை ஆயுதப்படையினரின் உதவியுடன் தீர்த்துவைக்காமல் தனது சாமர்த்தியத்தின் மூலம் தீர்த்துவைக்கவே பிரதமர் முயன்று வருவதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (கு)

# "1-ம் எதிரியிடம் வலிந்து வாக்குமூலம் பெற்று பொய்ச்சாட்சியத்தை நாம் சோடிக்கவில்லை"

## ரியூட்டரி மாணவி கொலைவழக்கில் சப் இன்ஸ்பெக்டர் மீண்டும் சாட்சியம்

(நமது புலோலி நிருபர் . திருச்செல்வம்)

''3-4-80ல் நானும் நிசாமும் 1-ம் எதிரியிடமும் வலிந்து வாக்குமூலம் எடுத்ததன்மூலம் பொய்ச்சாட்சியம் சோடித்திருக்கிறேம் என்பதை மறுக்கிறேன், அப்படி நான் செய்திருந்தால் நான் தண்டிக்கப்படலாம்''

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன்கொலைவழக்கு விசாரணையில் மீண்டும் சாட்சியமளித்த காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. த.இரத்தினசபாபதி நீதவானின் கேள்விகளுக்குப் பதிலளித்துச் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

வழக்கு விசாரணையில் நீதவானின் கேள்விகளுக்குத் தொடர்ந்து பதிலளித்து சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி சொன்னதாவது:-

நீதவான்: 3-4- 0 அன்று யாழ் சிறைச்சாலைக்குச்சென்று 1-ம், 2-ம் எதிரிகளை விசாரிப்பதற்கு துப்புக்கிடைத்தா போனீர்கள்?-துப்புக் கிடைக்கவில்லை. மேல்விசாரணைக்காகச் சென்றேம்.

நீதவான்: துப்புக்கிடைக்காமல் ஏன் போனீர்கள்? (பதிலில்லை.)

நீதவான்: உம்மை இவ்வழக்குச் சம்பந்தமான விசாரணைகள் நடந்துகொண்டிருக்கும்போது காங்கேசன் துறைக்கு இடம்மாற்றியது எதற்காக? - காரணம் தெரியாது

நீத: நீர் தண்டனைக்குரிய மாற்றமாகத்தான் காங்கேசன்துறைக்கு இடம்மாற்றப்பட்டீர்.-இல்லை.

- நீத: இக்கொலைவழக்கில் துரட்சியை அணைப்பதற்கு முன்பு யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு கிங்ஸ்லி விக்கிரமசூரியாவுக்கு கமலம் கொலைவழக்கிலே குற்றவாளிகளைக் கண்டு பிடித்துவிட்டோமென்று அறிவித்தீர்களா? - நான் அப்படி அறிவிக்கவில்லை. வேறு யாரும் அறிவித்தார்களா தெரியாது.

நீத: பொலிஸ் அத்தியட்சகர் உம்மைத் தண்டனைக்குரிய இடமாற்றமாக காங்கேசன்துறைக்கு அனுப்பவில்லையா?- இல்லை.

நீத: 3-4-80 ல் நீரும் நிசாமும் சேர்ந்து 1-ம் எதிரியிடம் வலிந்து ஒரு வாக்குமூலம் எடுத்ததன்மூலம் பொய்ச்சாட்சியம் சோடித்திருக்கிறீர்கள்? - நான் அதை மறுக்கிறேன்.

நீத: இது சட்டக்கோவை 190 ம் பிரிவின்கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம்? அப்படி நான் செய்திருந்தால் நான் தண்டிக்கப்படலாம்.

நீத: இந்த ஒப்புதல் வாக்குமூலம் நீங்கள் எடுத்ததன் மூலம் நீதிமன்றம், கொலை செய்த குற்றவாளிகள் யார் என்ற உண்மையைக் கண்டு பிடிக்கும் விடயத்தில் தவருக நெறிப்படுத்த எத்தனித்திருக்கிறீர்கள்?-இல்லை.

நீத: இது நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றமாகும்? -நான் அதை மறுக்கிறேன்.

நீத: 9-5-80 அன்று இந்த வழக்கின் துரட்சியை அணைக்கும்போது குற்றவியல் நடைமுறைச் (1977 ம் ஆண்டு 15 ம் இலக்க) சட்ட 147 ம் பிரிவின்கீழ் தகவல் புத்தகத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இரண்டினைத் தாக்கல் செய்வதற்கு நீங்கள் சட்டப்படி கட்டாயமாகக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறீர்கள். நீங்கள் 9-5-80 அன்று தகவல் புத்தகத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இரண்டினை மன்றில் தாக்கல் செய்யாதுவிட்டதனுல் சட்டக்கோவை 281 ம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்துள்ளீர்கள்? - நான் துரட்சியை அணைக்கவில்லை.

மன்றில், கமலம் அணிந்திருந்தநாவல்பழநிறச்சட்டை, இரண்டு துண்டுகளாகக் கிழிந்திருந்த ஒரு உட்சட்டை, கௌபீனத்துண்டு ஒன்று என்பன காட்டப்பட்டன, சாட்சி நாவல்நிறச் சட்டையை 22-2-80 அன்று மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பொறுப் பேற்றதாகவும் இரண்டு துண்டுகளாகக் கிழிந்திருந்த ஒரு உட்சட்டையையும், கௌபீனத் துண்டையும் யாழ் வைத்தியசாலையில் யாழ் சட்டவைத்திய அதிகாரி திரு. சரவணபவானந்தன் கமலத்தின் பிரேதத்திலிருந்து கழற்றி என்னிடம் ஒப்படைத்தார் எனவும் கூறி அவைகளை அடையாளம் காட்டினர்.)

(கு)

## தமிழகத்தை சுற்றிப் பார்க்க வசதி

(மதுரை)

மதுரையில் அடுத்தாண்டு நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளையும், தமிழ்க் கலைகளையும் காண்பிக்கத் தமிழக உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மகாநாடு முடிவுற்ற பின்னர், ஒரு வாரம் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவரென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அஸாம் பிரச்னை: பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

புதுடில்லி, அக். 5

அஸாமிலுள்ள வெளிநாட்டவர் பிரச்னை தொடர்பாக மத்திய அரசுக்கும் அஸாம் மாணவர்களுக்குமிடையே நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

திங்களன்று ஆரம்பமாகவிருந்த பேச்சுக்கள் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்ப[illegible]ள்ளது. (கு)

## "கமலத்தைவேறுயாருடனும் கதைக்கக்கூடாதென்றேன்"

### சசீதரன் தொடர்ந்து சாட்சியம்

(புலோலி)

''கமலம் வேறும் யாருடனேயோ கதைப்பதாக அரவிந்தன் சொன்னதை முழுக்க முழுக்க நான் நம்பவில்லை. என்றலும் கமலத்துக்கு வீணுக கூடாதபெயர் வரக்கூடாதென்பதற்காகவே கமலத்தை வேறு ஆட்களுடன் கதைக்க வேண்டாமென்று மாலாமூலம் எச்சரித்தேன்''

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம். இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த திருநாவுக்கரசு சசீதரன் 1-ம் எதிரிசார்பில் ஆஜரானசட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினத்தால் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து சசீதரனை 1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: உமக்கு எத்தனைவயது? 21.

சட்: உமது சகோதரி இந் நீதிமன்றத்தில் இருக்கின்ருர்? ஆம்.

சட்: கமலத்தைவிட வேறு காதல்களும் உமக்கு இருந்தனவா? இல்லை.

சட்: இதுதான். உமது முதல் காதல்? ஆம், நான் காதலித்த ஒரே ஒரு பெண் கீதாதான்.

சட்: நீர் 1-3-80 ல் பொலிசிற்குவாக்குமூலம் கொடுத்தீர்? ஆம்.

சட்: பொலிசிற்குக்கொடுத்த வாக்குமூலம் ஞாபகமாக இருக்கின்றதா? முழுவதும் ஞாபகமில்லை.

சட்: நீர் கீதாவுக்கு மாலாவிடம் கொடுத்துவிட்டதுதான் முதற் டிதம்? ஆம்.

சட்: மற்றக் கடிதத்தைப் பல்கலைக்கழகத்திலிருந்து அனுப்பினீர்? ஆம்.

''அரவிந்தன் என்ற எனது நண்பன் கமலம்வேறு ஆளைப் பார்த்துச் சிரித்துக் கதைப்பதாக எனக்குத் தெரிவித்திருந்தார் எனவே நான் வல்வெட்டித்துறைக்கு வந்தஇடத்தில், என்னைத்தவிர வேறு யாருடனும் கதைக்கவோ, அவர்களைப் பார்த்துச் சிரிக்கவோ வேண்டாமென்று கீதாவிடம் சொல்லுமாறு மாலாவிடம் சொன்னேன்.

''நான் அப்படிச் சொல்லியனிப்பியதை யடுத்து கமலம் எனக்குக் கடிதம் எழுதிய போதுதான் அப்படி வேறு எவருடனும் கதைக்கவோ, சிரிக்கவோ மாட்டேன் என்றும் தன்னைவீணுகச் சந்தேகிக்க வேண்டாமென்றும், தான் என்னைத்தான் எப்படியும் திருமணம் செய்வதாகவும், வேறு எவரையும் திருமணம் செய்யப்போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார். நான் அக்கடிதத்தைக்கிழித்து விட்டேன்.

''எனக்கு 1ம் எதிரியைச் சிறுவயதிலிருந்தே தெரியும். அவர் கமலத்திற்கு உறவினர் என்பது எனக்குத் தெரியாது. கமலமும் 1ம் எதிரி தனக்கும் சொந்தமென்று எனக்குச் சொல்லவில்லை. நான் ஒருசில தடவைகள் கமலத்துடன் கூடி பஸ்சில் பருத்தித்துறையிலிருந்துவல்வெட்டித்துறை வரை போயிருக்கிறேன் ஆனல் கமலத்துடன் கதைக்கவில்லை.

சட்: உமக்கு மோகனை எப்போதிருந்து தெரியும்? சின்ன வயதிலிருந்தே மோகனை எனக்குத் தெரியும். ஆனல் 1978ம் ஆண்டுதொடக்கம் பழகினேன்

சட்: மோகன் உம்மோடு கூடப் படிக்கவில்லை? இல்லை.

சட்: 1979ம் ஆண்டின் பின்னர் மோகன் உம்மை எங்கே சந்தித்தார்? ஒரு கராஜ் ஒன்றில் இருந்து கூடிப் படிப்பார்கள். நான் அங்குசென்று அவரைச் சந்திப்பேன்.

சட்: கமலம் இறந்த சம்பவம் எப்போது உனக்குத்தெரியும்? பொலிசார் வரச்சொல்லி செய்தி அனுப்பிய பின்னர் தான் எனக்குத்தெரிந்தது.

சட்; நீர் கீதா (கமலம்) வைக்காதலித்தீர்? ஆம் நான் கீதாவை மனதாரக்காதலித்தேன்.

சட்: கமலத்திற்கும் உமக்கு

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பக்தனின் வலிமை எதில் உள்ளது? அவன் கடவுளின் குழந்தையாகின்றான். அவன் சிந்தும் பக்திக் கண்ணீர்களே அவனுடைய வலிவுமிக்க ஆயுதமாகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### 'போற்றினும் போற்றுவர்'

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் முனிவர்.

'மறைவும் அப்படியாகுக' என்று நாம் எம்முடைய திருத்தத்தையும் சேர்த்துக் கொள்ளவிரும்புகிறோம். இத் 'ததாஸ்து' நாட்டின் நான்காவது பிரதமர் ஜெனரல் சேர் ஜோனின் மறைவு குறித்ததாகும்.

இன்றைய ஐ. தே. கட்சி ஆட்சியில் திட்டமிட்டது போல் பல நன்மைகளைப் புரிந்த தலைவர், ஈற்றில்சுதந்திர இலங்கையின் மிகப் பெரும் பட்டத்தை மரணப் படுக்கையிலே பெற்றபின்னரே மறைந்தாரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை இன்று ஜனநாயக சோஷலிசக்குடியரசு; அதன் முதல் ஜனாதிபதி, மறைந்த முன்னை நாள் பிரதமரின் உற்ற நண்பன். அவருடைய ஆசியுடன் வழங்கப்பட்ட கௌரவம், அவருக்கு மிகப் பொருத்தமானதும் பிடித்தமானதும் என்பதில் ஐயமில்லை.

பிரிட்டிஷ் மன்னர், மகாராணி போன்ற பெரியோரின் சாம்ராச்சிய பட்டங்களிலும் பதக்கங்களிலும் பெருவிருப்பங்கொண்ட அமரர் சேர் ஜோனுக்கு 'சோஷலிசம்' என்பது கசப்பான சொல்.

பிரபுத்துவ யுகத்தில் வாழ்ந்து நாட்டின் விவகாரங்களைத் திறம்பட நிர்வகித்த தலைவர், மக்கள் யுகம் உருவாகிய அறிகுறியை மிகஅச்சத்துடன் நோக்கினார்.

அச்சம் என்பதை அறியாத போர்வீரன் முதன் முதல் 'மரமேறிகள்' பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததைக்கண்டு அஞ்சினார். நாட்டுக்கு என்ன நேரிடுமோ என்று அவர் கலங்கியது உண்மை. பாக்குமரங்களில் பாக்கைப்பறிக்க ஆளில்லையே என்று விசனித்தார்!

எனவே அவருடைய தவப்பயனால் பிரபுத்துவ மணம் இன்றும் ஓரளவிற்கு வீசும் ஐ. தே. கட்சி ஆட்சியில் புகழொடு மறைய அவருடைய மகத்தான நாட்டுப்பற்று உதவியது.

எதிர்க்கட்சின் ஆட்சியானால் சேர் ஜோனின் புகழ் இன்று வானளாவியது போல் பாடப்படுமா? நாட்டின் பெருந்தலைவர் ஒருவர் மறைந்துவிட்டால் நாடு முழுவதும், சாதி, மத மொழிவேறுபாடின்றி அஞ்சலி செய்யும் பண்பு சுதந்திர இலங்கையில் இன்னும் உதயமாகவில்லையென்பது வருத்தத்துக்குரியது.

காலனி ஆட்சியில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் கொழும்பில் இறந்து விசேட புகையிரதத்தில் நாட்டின் தலைவர்கள் பலர் சகிதமாக யாழ்ப்பாணத்துக்கு வந்த சாட்சி கண்கொள்ளாக்காட்சி, சிங்களத் தலைவர் அமரர் கன்னங்கரா, 'சூரியன் அஸ்தமித்துவிட்டான்; இலங்கையின் சூரியன் (உத்தமபுதல்வன்) (Sun, Son) அஸ்தமித்துவிட்டான்' என்று பாராட்டிய நினைவு 50 வருடங்களுக்குப்பின் நேற்றுப் போல் தோன்றுகிறது.

கட்சி அரசியல் எமது நாட்டுக்கோ நாகரிகத்துக்கோ ஒவ்வாத பண்டமென்பதே எமது கடந்த கால அனுபவமாகும்.

மக்கள் ஆட்சி உருவெடுக்கும் இந்நாளில் தொழிலாள வர்க்கத்தைத் தூசென மதியாத அரசியல் சித்தாந்தம் காலகதியில் செல்லாக் காசாகும்.

எனவே கட்சித் தலைவர்களும் கட்சிப் பாவலர்களும் மறைந்த தலைவரைப் போற்றுவதும், எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் தூற்றுவதும் ஜனநாயகப் பண்பாகாது.

'எடுத்தஎடுப்பிலே எதனையும் பேசிவிட்டு பின்புதான் சிந்திப்பவன் யான்' என்று தமக்குரிய பாணியில் மொழிந்தவர் கள்ளம்கபடமற்ற அமரர் சேர் ஜோன்.

பாண்டுங் மாநாடு, அவரின் இவ்வித போக்கால் குழம்ப நேரிட்ட கட்டம் இருந்தது. உண்மையைப் பேசும்போதும் நோவு உண்டாக்காமல் பேசவேண்டும். நீதியும் தருமமும் நன்றாகக் கண்டவர்களுக்கு உண்மையும் இனிமையும்கலந்த பேச்சுத்தானாகவே வரும்.

இவ்வித சக்தி தம்மிடமிருந்ததாக மறைந்த தலைவர் என்றுமே நடித்ததில்லை. போற்றுவதிலும் தூற்றுவதிலும் கைதேர்ந்த அரசியல் பாவலர்களின் புகழுரை அவர்கள் கூற்றிலிருந்து வர் என்பதை நிரூபிக்கின்றது.

# நாட்டின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண மகாவலித்திட்டம்

-- பேராசிரியர் டபிள்யு. லூதர்ஜெயசிங்கம் --

(புவியியல் பீடத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

மனித நாகரிகத்தின் வரலாற்றில் ஆற்றுப்பள்ளத்தாக்குகளே நாகரிகத்தின் பிறப்பிடங்களாகவும் தொட்டில்களாகவும் விளங்கியுள்ளன. யூப்பிரட்டீஸ், தைகிறிஸ், சிந்துகொவாங்கோ போன்ற நதிகளைக் கொண்ட பள்ளத்தாக்குப் பகுதிகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகவும் உள்ளன. இலங்கையின் நாகரிக வரலாறும் இதிலிருந்து விதி விலக்கானதல்ல. அருவி ஆறு, மகாவலி கங்கை ஆகியவற்றின் வடி நிலப்பகுதிகளைச் சார்ந்தே இலங்கையிலும் நாகரிகமையங்கள் காணப்பட்டன என்பதை வரலாறு கூறுகின்றது. இலங்கையில் இடைக்காலத்தில் ஏற்பட்ட சில அரசியல் மாற்றங்களால் ஆற்றங்கரையோர நாகரிகம் புறக்கணிக்கப்பட்டது அல்லது சீர்குலைக்கப்பட்டது. பெருமை பெற்றிருந்த அந்த நிலையை மீட்பதனால் நாட்டின் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியும் என்பதனால் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் மீது கவனம் திருப்பப்பட்டிருக்கின்றது.

### தனிச்சிறப்பு மகாவலிக்குண்டு

இலங்கையின் நதிகளில் மகாவலி கங்கை தனிச்சிறப்புடையது. அந்த நதி இலங்கையின் இயற்கைவளங்களில் தலைசிறந்ததாகவும் ஒரு ஆசானாகவும் கணிக்கப்படக் கூடியது. மகாவலி கங்கை 207 மைல் நீளமுடையது. ஏனைய நதிகள் யாவும் இதன் அரைப்பங்கு நீளத்திலும் குறைவானவையே என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் முற்றான வடிநில பரப்பளவு 4034 சதுர மைல் பரப்பளவு உடையதாகும். நாட்டின் மொத்தநிலப்பரப்பளவு 25332 சதுர மைலாதலால் மகாவலி வடிநிலம் ஏறத்தாள 1/6 பங்கினை உள்ளடக்கியதாகும். இந் நதி வருடாந்தம் சராசரியாக 67,20,000 ஏக்கர் அடி நீரை வெளியேற்றுகின்றது. இலங்கையின் நதிகள் வெளியேற்றும் மொத்த நீரில் இத்தொகை ஏறத்தாள 1/5 பங்கு என்பதும் குறிப்பிடத்தக்கது. கற்றன் மேட்டு நிலத்தின் தென் உயர் பகுதிகளில் உற்பத்தியாகும், இந் நதி கற்றன் மேட்டு நிலத்தின் வழியே வடமேற்காக விரைந்து செல்லுகின்றது. களனி கங்கையின் ஆரம்பக்கிளை நதிகளான கெகெல் கமுவ ஓயா, மஸ்கெலிய ஓயா என்பனவும் இதற்கு சமாந்தரமாகவே பாய்கின்றன. கினிகத்தனையை அடையும் மகாவலி பின்னர் முழங்கை வளைவொன்றினால் வடகிழக்காக திரும்புகின்றது. இங்கே கற்றன் மேட்டு நில நதிகளில் குறிப்பாக கொத்மலை ஓயாவைப் பெறுகின்றது. கண்டி மேட்டு நிலத்தையடையும் மகாவலி மீண்டும் கட்டுகஸ்தோட்டையில் திரும்பி தும்பறைப் பள்ளத்தாக்கினுள் இறங்குகின்றது. இங்கே குறுந்து ஓயா, உமா ஓயா, பதுளை ஓயா, லொக்கல் ஓயாபோன்ற வெலிமடைப் பீடபூமியின் நதிகளைச் சேர்த்துக் கொள்ளுகின்றது. மீண்டும் மினிப்பேயில் வடகிழக்காக திரும்பி தாழ் நிலத்தினுட் புகுகின்றது. அங்கே மாத்தளை குன்றுகளிலிருந்து வரும் அம்பன் கங்கையையும் மன்னம்பிட்டிக்கருகே சேர்த்துக் கொள்ளுகின்றது. தொடர்ந்து ஓடும் இப் பெருநதி திருகோணமலைக்கருகே கடலை அடைகின்றது. ஏறத்தாள 7000 அடி உயரத்தில் தோன்றும் இந் நதி 50 மைல் தூரம் ஓடியதும் 1000 அடி உயரத்தை அடைகின்றது. எஞ்சிய 150மைலுக்கு அதிகமான தூரத்தை அது ஒரு தாழ்நில வடிகாலாகவே கடந்து செல்லுகின்றது. கற்றன் மேட்டுநிலம் மத்திய உயர் நிலத்தின் மேற்கு சரிவில் அமைந்திருப்பதால் அப்பகுதி தென் மேற்குப் பருவக் காற்றுக் காலத்திலேயே அதிக மழையைப் பெறுகின்றது. மத்திய உயர் நிலத்தின் கிழக்குச் சரிவிலுள்ள வெலிமடைப் பீடபூமியும் வடகீழ் தாழ் நிலப்பகுதியும் வடகீழ்ப் பருவக் காற்றினால் மழையைப் பெறும். தொகுத்துக் கூறுவதானால் மகாவலியும் உயர் நீரேந்து பகுதிகள் ஏதாவதொரு பருவக்காற்றில் மழையைப் பெறக்கூடிய வாய்ப்புடையனவாக உள்ளன. இவ்வாறு வருடம் முழுவதும் போதிய நீர் வளத்தைப்பெறக் கூடிய வாய்ப்பு இலங்கையின் ஏனைய வாள்பிரதேச நதிகளுக்கில்லை என்பதும் அதுவே மகாவலி, அபிவிருத்தி ஏற்ற களமாக தெரிவு செய்யப்படுவதற்கும் காரணங்களாகின்றன. இத்துடன் இந் நதி விளைவிக்கும் சேதங்களை கட்டுப்பாட்டினால் நலன்களால் மாற்றியமைக்கமுடியும்.

மகாவலி வடிநிலத்தை அபிவிருத்தி செய்யும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டனவாயினும் 1978ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து நடவடிக்கைகளில் புதிய திருப்பமும் துரிதமாக்கும் எண்ணமும் உதயமாயிற்று. இதற்கென ஒரு தனி அமைச்சு நிறுவப்பட்டமையும் இத் திட்டத்தின் மீது கொண்ட ஆர்வம் புலப்படுகின்றது. ஆரம்ப திட்டம் மறுபரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தப்பட்டது. இதுவே இன்று நாம் கூறிக் கொள்ளும் துரிதமாக்கும் திட்டமாகும். புதிதாக மதுறு ஓயா பகுதி முக்கியத்துவம் பெற்றது. 30 ஆண்டுகளுக்கென வகுக்கப்பட்ட நிறைவேற்றுக் கால எல்லை 6 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. அத்துடன் செலவுத்தொகையும் 1100 கோடி ரூபாவென வரையறுக்கப்பட்டது. இவை யாவற்றிலும் மேலாக உழைப்புச் சேவை விஸ்தரிக்கப்பட்டதுடன் விரைவுபடுத்தப்பட்டது. கடின உழைப்பு, சிரமதானம் தேசிய சேவை என்ற குரல் போன்றன. இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். இத்திட்டத்தின் வெற்றிக்காக பல்வேறு தியாகங்களையும், சாதனைகளையும் ஆற்றிவரும் அதே தலைமுறையினர் தங்கள் வாழ்நாட்களிலேயே அதன் நன்மைகளையும் பெறத் தவறக் கூடாது என்பதற்காகவே திட்டம் துரிதமாக்கப்பட்டது. அத்துடன் நாட்டில் இன்று உடன் தீர்வுகாணப் படவேண்டிய வேலைவாய்ப்பு, உணவில் தன்னிறைவு, குடியிருப்பு வசதி போன்றவற்றிற்கும் இத் திட்டமே உடன் வாய்ப்பளிக்கக் கூடியதாக இருக்கின்றது. மேலும் கிராம அபிவிருத்திக்கும் வலு நெருக்கடியை சமாளிப்பதற்கும் மின் வலுவின் விரைவான உற்பத்தி அவசியமாகின்றது. திட்டத்தை நீடிப்பதால் ஏற்படும் நிதி நெருக்கடியும் இங்கு முக்கிய கவனத்திற்கெடுக்கப்பட்டது. மூலப்பொருட்களின் விலையேற்றம், எரிபொருள்விலையேற்றம், பண வீக்கம் போன்றன துரிதமாக்கும் எண்ணத்தை உருவாக்கின எனலாம்.

### ஒன்றோடொன்று இணைக்கும் திட்டங்கள்

திட்ட வேலைகள் அணைகளை அமைத்தல், நீர்த்தேக்கங்களை உருவாக்குதல், கால்வாய்களை இணைத்தல் என்பவற்றுடன் மட்டுமல்லாமல் காட்டாக்கம், போக்குவரத்து, குடியேற்றம், நிர்வாகம் போன்றனவற்றால் சிக்கலான ஒன்றோடொன்று இணைப்பான தொடர்புகளை உடையது. மகியங்கனையில் இருந்து திருகோணமலை வரையுள்ள பகுதியே புதிதாக அபிவிருத்தியைப் பெறுகின்றது. திட்டவேலைகளை எளிதாக்கும் நோக்குடன் இப்பிரதேசம் A,B,C,D,G,H எனப் பிரிக்கப்பட்டுள்ளது. A பிரிவில் 1,00,000 ஏக்கர்கள் அடங்கும். ஏனைய பிரிவுகளில் முறையே 1,25000 ஏக்கர், 73,000 ஏக்கர், 1,50,000 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கியனவாகும். தற்பொழுது B பிரிவில் மதுறு ஓயா நீர்த்தேக்க வேலைகளும், C பிரிவில் மினிப்பே அணைக்கட்டு, மினிப்பே கால்வாய் வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. இதைவிட அருவியாற்று வடிநிலத்திலுள்ள காலவீவா, ராஜாங்கனைப் பகுதி H பிரிவு எனப்படும் 71,000 ஏக்கர்களை உள்ளடக்கிய இப்பிரிவு ஓரளவு நிறைவுற்றுள்ளது. இதனோடு தொடர்பான பொல்கொல்ல- உக்குவளை குடைவுவழி, சுதுகங்கை அகலமாக்கும் வேலைகளும் நிறைவேறியுள்ளன. அனுராதபுர குளங்களும் நீரைப்பெற்றுக் கூடிய பயனை அளிக்க இத்திட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

(நாளை முடியும்)

## மக்கள் கருத்து

### தலைமன்னார் பியரில் கெடுபிடி!

இந்தியா செல்லும் பிரயாணிகள் தலைமன்னார்த்துறை முகத்தில் படும் துன்பங்களும் தொல்லைகளும் சொல்லில் அடங்கா எத்தனை பேர் வந்து பார்வையிட்டுச் சென்ற போதும் நிலைமை சீர்திருந்துவதற்குப் பதில் மோசமடைந்தே காணப்படுகிறது.

அங்கு கடமையாற்றும் அதிகாரிகள் கிலரின் கெடுபிடிகள் ஒருபுறமிருக்க சிற்றூழியர் சிலரின் அட்டகாசம் பொறுக்க முடியாது,

அதிகாலை நாலு மணிக்கே கப்பலுக்குப் போவதற்கு பிரயாணிகள் கியூவில் நிற்கிறார்கள். இச்சமயத்தில் அந்த வாசலுக்குப் போங்கள் என்று சிலரும் இந்தவாசலில் நிற்க வேண்டாமென்று வேறு சிலரும் உத்தரவு போடுகிறார்கள் பொதிகளுடன் பிரயாணிகள் அங்குமிங்கும் நாயாக அலைய வேண்டியேற்படுகிறது.

சென்றமாதம் 29-ந் தேதி அதிகாலை இந்தியக்கப்பலில் செல்வதற்குக்காத்து நின்ற பிரயாணிகள் தலைமன்னார் பியரில் வைத்து அதிகாரிகளினாலும் காவற்றுறையைச்சேர்ந்த சிலரினாலும் தாக்கப்பட்டு அங்குமிங்கும் அவலப்பட்டுச் சிதறியோட வேண்டியேற்பட்டது. தலைமன்னார் பியரில் நடைபெறும் சம்பவங்கள் எந்தத்துறைமுகத்திலும் நடைபெறாத நிகழ்ச்சிகள் அமைச்சர்களும் அரசும் இதுபற்றிக் கவனம் செலுத்தித் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

தலைமன்னார்

[illegible] பொன்னம்பலநாதஐயர்

## பட்டிருப்பில் நான்கு வீடமைப்புத் திட்டங்கள்

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கத்தின் சிபார்சின் பேரில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் பட்டிருப்புத் தொகுதியில் 350 வீடுகளைக் கொண்ட நான்கு வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

பெரிய கல்லாற்றில் 100, மகிழூரில் 150, பழுகாமத்தில் 50, களுதாவளையில் ஐம்பது இத்திட்டத்தின் கீழ் அமைகின்றன.

## தொடர்ந்து றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

பட்டப்பகலில் நவாலி குருக்கள் மடத்திலுள்ள வீடொன்றில் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், புடவைகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 4 சந்தேகநபர்களை மீண்டும் றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் அரசுக்கு

## அடிமைகளாக இருக்கக்கூடாது

### திறந்தவெளியரங்கில் அமைச்சர் காமினி

(புலோலி நிருபர்)

"இந்நாட்டில் பல்வேறு துறைகளிலும் துரித அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதும், நாட்டு மக்கள் அரசின் அடிமைகளாக இருக்காது சுதந்திர புருஷர்களாக வாழவேண்டுமென்பதையுமே குறிக்கோளாகக் கொண்டு நமது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது."

இவ்வாறு, யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காணி, காணிஅபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"யாழ்ப்பாணத்தில் 75 வீத மானவர்கள் 35 வயதிற்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்விளைஞர்களின் வாழ்க்கைமுறையை வளம்படுத்தவேண்டும். அவர்கள் வடக்கில் இருந்தாலும் சரி, தெற்கில் இருந்தாலும் சரி அவர்களது வேலைவாய்ப்புக்களும், தேவைகளும் பூர்த்தி செய்யப்படவேண்டும். முக்கியமாக விவசாயம் செய்பவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும். யாழ்ப்பாணம் ஓர் இளைஞர் சமுதாயப் பகுயாகும் என்பது நன்ருகத் தெரிகிறது.

"எமதுஅரசாங்கம் பதவிக்கு வந்த காலத்தில் இந்நாட்டில் 10 இலட்சம் மக்கள் தாம் குடியிருக்கும் காணிகளின் காணி உரிமை இல்லாதவர்களாகவே இருந்தார்கள். இக்காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்கள் எனக் கருதப்படும் மக்களுக்கு குடியிருப்பு காணி உரிமைகளை வழங்கி வருகின்ருேம். 1984ம் ஆண்டிற்குள் இவ்வாறு அத்துமீறிக்குடியேறிய 10 இலட்சம் மக்களுக்கும் காணி உரிமைகளை வழங்கிவிடுவோம்.

"1977ம் ஆண்டு இந்தநாட்டில் 15 இலட்சம் பேர் வேலை இல்லாதிருந்தனர். இவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்னைகளின் காரணமாக அவர்களில் பலர் சிறைச்சாலையை நிறைத்துக்கொண்டிருந்தனர். தற்போது சிறைச்சாலைகளும் மூடப்பட்டுவருகின்றன. மக்களின் சகல தேவைகளுக்கும் கியூ வரிசை முறையே அப்போதுஇருந்தது. ஆனல் எமது அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளால் அந்நிலை நீக்கப்பட்டுவிட்டது. அக்காலத்தில் பத்திரிகைகள் மூடப்பட்டன. அந்த அரசாங்கம் தனக்கு எதிராக எவரும் இருப்பதை விரும்பவில்லை. இந்நிலைகளை நாம் நீக்கியுள்ளோம்.

"அரசாங்கத்தின் முதற் கடமை மக்களின்தேவைகளைப் பூர்த்திசெய்வதும், நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதுமேயாகும். எமக்குள்ள குறைபாடுகளை பேச்சுவார்த்தையின்மூலம் தீர்க்கலாம்.

"எமது அரசாங்கத்தின் மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டமூலத்திற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் ஆதரவு அளித்துள்ளனர். அவர்களது சகல பிரச்னைகளுக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபை வழிவகுக்குமென்று நான் கூறவில்லை.

"ஆசியநாடுகளைப்பொறுத்த வரையிலே வங்காள தேசத்திற்கு அடுத்த வறுமை நாடாக இலங்கையே இருந்து வருகின்றது.

1984 ம் ஆண்டிற்கு முன்னர் மேலும் 3½ இலட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனவசதியைப் பெறவுள்ளது. கொத்மலை விக்டோரியா மதுறு ஓயா மெற்காகந்த போன்ற அணைகளைகட்டு நீர்த்தேக்கங்களினல் இலங்கையின் சகல பாகங்களும் நன்மைபெறும்.

எமது நாட்டின்அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி ஆராய்வுகளை மேற்கொள்வதற்கென உலகவங்கியின் நிபுணர் குழுவொன்று இங்கு வந்து ஆராய்வுகளை மேற்கொண்டுவருகின்றது. அந்தக் குழுவிடம் 1982-ம் ஆண்டுக்கு முன்னர் அபிவிருத்தி சம்பந்தமான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளோம்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம்மாத்திரம்தான் எமது அபிவிருத்தித் திட்டம் என்று நினைத்துவிடக்கூடாது. மேலும் பல்வேறு துறைகளிலும் நாம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொணடு வருகிருேம். இந்த அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தவோ அல்லது தள்ளிப்போடவோ மாட்டாது. உரிய நேரத்தில் செய்யவேண்டியனவற்றைச் செய்து முடிப்போம். இதில் நாம் நிச்சயம் வெற்றிகாண்போம்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயகோன், ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

---

காவலூரில் மூன்று தினங்கள் நடைபெறும்

## சிலப்பதிகார மாநாடு;

### தமிழறிஞர்கள் உரையாற்றுவர்

(ஊர்காவற்றுறை)

காவலூர் இளங்கோவடிகள் மன்றத்தின் முதலாவது சிலப்பதிகார மாநாடு இம்மாதம் 10-ம் திகதி முதல் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

தென்கரம்பன் பழைய பூங்கா மைதானத்தில் அமைக்கப்படவுள்ள வண தனிநாயகம் அடிகளார் அரங்கில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் ஈழத்து தமிழக அறிஞர்கள் உரையாற்றுவார்கள்.

கரம்பன் கண்ணகி அம்மன் கோவிலிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இம்மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு தமிழ்மறைக் கழகத்தலைவரும் ஊர்காவற்றுறை எம். பி. யுமான பண்டிதர் கா. பொ. இரத்தினமும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு மு. சோமசுந்தரமும் மூன்ரும் நாள் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் க. கைலாசபதியும் தலைமை தாங்குகின்றனர்.

#### தமிழக அறிஞர்கள்

தமிழகத்திலிருந்து பன்மொழிப்புலவர் மு. கு. ஜகன்னுதராஜா எழுத்தாளர் கொ. மா. கோதண்டம் ஆகியோர் கலந்து கொள்ளும் இம்மாநாட்டில் ஈழத்து அறிஞர்களான கலாநிதி அ. சண்முகதாஸ், க. சொக்கலிங்கம் ஆ. சிவநேசச்செல்வன் நா. சுப்பிரமணியஐயர் சித்திரலேகா மௌனகுரு மனோன்மணி சண்முகதாஸ் உட்பட பலர் உரையாற்றுகின்றனர்.

#### கவியரங்கு

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராஜன் தலைமையில் இடம் பெறும் கவியரங்கில் கவிஞர்கள் அகளங்கன் காவலூர் ஜெகநாதன் அனலை ஆறு இராசேந்திரம் கோதண்டம் வடிவேலன் ஆகியோர் கலந்து கொள்வார்கள் மூன்ரும் நாள் அருள்மொழி அரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் தலைமையில் பட்டிமன்றமும் இடம் பெறும். (கு)

---

## சிரியாவின் பிரதிநிதி ட்ரும் வண்டிக்குப் பலி!

வார்சோ, அக். 5

சர்வதேச நீதிமன்றத்தின் சிரியா நாட்டின் அங்கத்தவர் 'ட்ரும்' வண்டியொன்று மோதியதால் அதில் சிக்கி பலியானர்.

ஒல்லாந்திலுள்ள ஹெக் நகரத்திற்கு அண்மையிலுள்ள கடற்படைக் களிப்பிடமொன்றில் இச்சம்பவம் நடந்தது.

இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிதுநேரத்தின்பின் தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் பெருகியதனல் மரணமானர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் இவர் சிரியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக 1962-ம் ஆண்டு தொடக்கம் 1964-ம் ஆண்டு வரை கடமையாற்றியுள்ளார்.

1976-ம் ஆண்டு சர்வதேச நீதமன்றத்திற்கு அங்கத்தவராக இவர் நியமிக்கப்பட்டார். (வெ)

---




உங்கள் சவாரிக்கு சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் சைக்கிள் சிங்கர்

TEAM

# சிங்கர் சைக்கிள்

பிரயாணம் எத்துணை தூரமானலும் நீங்கள் அலட்டிக் கொள்ளாமல் ஒய்யாரமாக ஓடுவதற்கு உகந்தது சிங்கர். கரடு முரடான மண் தெருவானலும் சரி, கல்லும் குழியும் உள்ள கடின பாதையானலும் சரி, சதுப்பு நிலமானலும் சரி, வைரமே உருவான உறுப்புக்களைக் கொண்ட உறுதியான சிங்கர் ஒய்யாரமாகவே ஓடுகிறது.

அசல் சிங்கர் பாரம்பரியத்தில் உருவான இச் சைக்கிள் ஆயுள் முழுவதும் உழைக்கின்றது.

ஒவ்வொரு சிங்கர் சைக்கிளுக்கும் விற்பனையின் பின் பராமரிப்புச் சேவையுண்டு.

விலை ரூபா: 890/- (வரி இல்லாதது)
(இலகு தவணைக் கட்டண வசதியுண்டு.)

சிங்கர் சிறப்பம்சங்கள்:



சகல சிங்கர் காட்சியறைகளிலும் கிடைக்கும்.

சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்,
83, சதாம் வீதி, கொழும்பு - 1. தொலைபேசி: 2 1 4 4 ...

சிங்கர் சைக்கிள் — சிங்கரின் பாரம்பரிய சிறப்பியல்புகளைக் கொண்டது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'பாரபட்சமாக நடக்கவில்லை'

## யாழ். முதல்வர் பதில்

[யாழ்ப்பாணம்]

எந்தச் சந்தர்ப்பத்திலும் தான் பாரபட்சமாக நடக்கவில்லை என்று, டாக்டர் ஏ. எஸ். ஏபிரகாம், சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த நகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்திலே கூறினார்.

முதல்வர் திரு, இராஜா விஸ்வநாதன் மேலும் கூறியதாவது:- என்னால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நியமனங்கள் வழங்கப்பட்டது. கட்சி உறுப்பினர் சிபார்சில் தான் வேலை வழங்கலாம் என நான் கூறவில்லை.

நடு வீதியில் மலகூடக் குழி கட்டப்பட்டிருப்பதாக எவரும் எனக்குப் புகார் செய்யவில்லை. எந்த ஊழியர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதல்வர் தெரிவித்தார்.

3 குழுக் கூட்டங்களுக்கு வராத உறுப்பினர்களை நீக்க வேண்டும் என. திரு. என். ரி. செல்லத்துரை தெரிவித்தார்.

அப்படி செய்ய முடியாதென்றும் சட்டத்தில் அதற்கு இடமில்லையென்றும் திரு. மரியாம்பிள்ளை கூறினர்.

குழுவுக்கு தொடர்ந்து வராத உறுப்பினர் காரணம் காட்டவேண்டும் என்று திரு. தம்பு கந்தையா கூறினார்.

நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது என முதல்வர் தெரிவித்தார். [சு[

---

### யாழ். இந்துக்கல்லூரி

## 64-வது ஆண்டுசாரணர்விழா

(யர்ழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி சாரணர் குழு 64வது ஆண்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச்சாரண ஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தி கலந்துகொள்ளுவார். திருமதி கந்தமூர்த்தி பரிசில்கள் வழங்குவார்.

இவ்விழாவில் நிலைக்காட்சி, திடற்காட்சி, பொருட்காட்சி, பாசறை அமைப்பு, நாடகங்கள், பாசறைத்தீ முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

குழுச்சாரணர் தலைவர், ஆசிரியர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா, சாரணர் தலைவர் ஆசிரியர் எஸ். பி. வில்வராசா ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

---

### சோதிட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தின் சோதிட நிபுணர்களின் கலந்துரையாடலும் "அதிர்ஷ்ட வழிகாட்டி" நூல் விமர்சன அரங்கும் இம்மாதம் 23-ம் திகதி மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

---

### காங்கேசன் துறைமுகத்தைப் பார்வையிட்டார்

(மாவிட்டபுரம்)

காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா நேற்றுமுன்தினம் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு விஜயம் செய்து அங்கு நடைபெறும் வேலைகளையும், இறங்கு துறையின் நிலைமையையும் நேரில் அவதானித்தார்.

மயிலிட்டியில் ஐ. தே. க. கிளை ஒன்றையும் அமைச்சர் திறந்து வைத்தார். (இ)

---

### மண்டலாபிஷேகம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தது.

மண்டலாபிஷேக பூர்த்தியின் சிறப்பு நிகழ்ச்சியாக நேற்றுமாலை ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் "பார்வதி கல்யாணம்" என்னும்பொருள் பற்றி அருளுரை நிகழ்த்தினர்.

அதனைத்தொடர்ந்து இசைச்செல்வி சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளையின் இன்னிசை விருந்தும், திரு. வீ. வீ. கே. ஆறுமுகத்தின் சொற்பொழிவும் இடம்பெற்றது.

---

# இரத்த வெள்ளத்தில் இறந்தவர் கிடந்தார்

## புலோப்பளை பிராமண இளைஞன் கொலைவழக்கில் சாட்சியம்

[பச்சிலைப்பள்ளி]

"சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்றபோது இறந்தவர் முற்றத்தில் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தார். இறந்தவரது சகோதரி குழறிய சத்தத்திற்கே நான் எனது மாமனாரின் வீட்டில் இருந்து அங்கே சென்றேன்."

இவ்வாறு புலோப்பளையைச் சேர்ந்த சா. குகபாலசர்மா என்ற பிராமண இளைஞனின் கொலை வழக்கில் சாட்சியமளித்த வர்த்தகரான சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை (வயது 33) என்பவர் கூறினார்.

இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்ற நீதிபதி திரு. கே. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

புலோப்பளையைச் சேர்ந்த சாம்பசிவசர்மாவின் மகன் குகபாலசர்மா என்பவரை 26-6-80 ம் திகதியன்று அதே இடத்தைச் சேர்ந்த பி. மரியாம்பிள்ளை, எவ். அந்தோனிப்பிள்ளை ஆகிய இருவரும், இறந்தவரது கடையில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக பளைப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சி. சிதம்பரப்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இறந்தவரது வீடு எனது மாமனாரின் வீட்டிலிருந்து 75 யார் தூரத்திலுள்ளது. இறந்தவரது வீட்டுக்கு நான்போகும் போதுஅவரதுபெற்றோர் பேரன் ஆகியோரும் வேறு ஆட்களும் நின்றார்கள். இறந்தவரின் சகோதரி, நான் சம்பவம் நடந்த இடத்திற்குப் போவதற்கு முன்பே அயல் வீட்டுக்குப் போயிருந்த பெற்றோர்களை கூட்டிக் கொண்டு வந்திருக்கக் கூடும். இறந்தவர் நான்கு முழ வேட்டி அணிந்திருந்தார். மேலங்கி எதுவும் அணிந்திருக்கவில்லை. இறந்தவரின் இடது பக்க நெஞ்சில் காயமிருந்ததைக் கண்டேன்.

### இரத்த வெள்ளத்தில் கிடந்தார்

நான் எனது மாமனாரின் வீட்டிலிருக்கும் போது தான் "ஐயோ" எனக் குளறிய சத்தம் கேட்டது. எனது மாமனார் முதலில் வீட்டுக்கு வெளியே வீதிக்கு வந்தார். அதனைத் தொடர்ந்து நாங்களும் வீதிக்கு வந்தபோது இறந்தவரின் சகோதரியான மங்களாம்பிகை அண்ணைக்குக் குத்திப் போட்டுது எனக் கூறிக் குளறிக்கொண்டு வீதியில் வந்தார். அப்போது இறந்தவருக்கு பாம்பு ஏதோ தீண்டி விட்டது என நினைத்துக் கொண்டுதான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றேன். ஆனால் அங்கே இறந்தவர் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தார்-

நான் செல்வதற்குமுன் இறந்துவரின் தகப்பன் மரியநாயகம் என்பவரைக் கார் பிடிக்க அனுப்பி இருந்தார். அதன்பின் ஜெயம் என்பவரையும் கார் பிடிக்க சயிக்கிளில்அனுப்பினார்கள். ஜெயமே கார் பிடித்து வந்தார். மரியநாயகத்தின் வீட்டுக்கும் எங்களது வீட்டுக்குமிடையில் தான் இறந்தவரின் வீடு உள்ளது. காரில் நானும் இறந்தவரின் பெற்றோரும் இறந்தவரை முதலில்பளை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று அதன் பின் சாவகச்சேரி வைத்தியசாலைக்

(7-ம் பக்கம் பார்க்க)

---

### எதிரி விடுதலை; வழக்காளிக்குப் பிணை

(மட்டுவில்)

வீதியில் சென்று கொண்டிருந்த நபரைத்தாக்கி, அவரின் பையிலிருந்த தங்க வளையல்களையும், ரூபா ஆயிரம் ரொக்கத்தையும் கொள்ளையடித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எதிரியை விடுதலை செய்து, வழக்காளியை ரூபா 750 ரொக்கப்பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

மிருசுவிலைச் சேர்ந்த இளைய தம்பி இரங்கநாதன் என்பவர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது கெற்பலியைச் சேர்ந்த சண்முகம் செல்லத்துரை என்பவர் இரங்கநாதனைத்தாக்கி அவரிடம் இருந்த 600 ரூபா பெறுமதியான தங்க வளையல்களையும், ரொக்கம் ரூபா 1000த்தையும் கொள்ளையடித்தாக சாவகச்சேரிப் பொலிசார் ஒரு வழக்கைத் தாக்கல்செய்திருந்தனர். இந்த வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி.வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. தம்பிரத்தினம் ஆஜரானார். சாட்சியத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, நீதிபதி எதிரியை விடுதலை செய்து பொலிசாருக்கு ஒரு வாக்கு மூலமும், நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் வேறு விதமாகவும் கூறியுள்ளார் என்றும், பொலிசாருக்கு பொய் வாக்குமூலம் கொடுத்த குற்றத்திற்காக இவர் மீது பொலிசார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறி வழக்காளியை ரூபா 750ரொக்கப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

---


# புறேற்றினெக்ஸ்
## புரதச்சத்து நிறைந்தது




இளம் பிள்ளைகளின் தசை நார்,
எலும்பு, மூளை ஆகியவற்றை விருத்தி
செய்வதற்குத்தேவையான புரதச் சத்தும்,
நோய்கள் வராமற் தடுக்கும் சக்தியும்
கொண்ட புறேற்றினெக்ஸ், விற்றமின்களும்
கனிப்பொருட்களும் நிறைந்தது.

இன்றே ஒரு போத்தல்
**புறேற்றினெக்ஸ்**
வாங்குங்கள்

சில்லறை விலை
50 இராம் – ரூபா 14-65
125 இராம் – ரூபா 28-25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WINDSOR** (JAFFNA)
Daily at 10-30 a. m. 2-00, 4 30, & 7-00 p. m only
SUSAN HAMPSHIRE, FRANK FINLAY,
MICHAEL PETROVITCH
in
**'NEITHER THE SEA NOR THE SAND'** Adults only Color

**சாந்தி** (யாழ்நகர் போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
"வெள்ளி விழா"
**நீயா?** வண்ணச்சித்திரம்
Next Attraction: "THE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**THE DEEP**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
**காத்தவராயன்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**MAN ABOUT THE HOUSE**
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

## வாக்குத் தத்த திருச்சடங்கு

மாத்தளை புனித மரியாயின் பிரான்சிஸ்கன் சபைத் துறவியான எஸ். தொபிதாஸ் அர்ப்பணவாக்குத்தத்த திருச்சடங்கை புனித பிரான்சிஸ் அசிசியார் திருநாளாகிய சனிக்கிழமை காலை கண்டி ஆயர் வந். ஏ. பேரால் பெரேரா ஆண்டகையினுல் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

அருட்சகோதரர்எஸ்.தொபிதாஸ், புனித யூதாததேயு ஆலய தாபகரும் யாழ். ஆசன, க்கோயில் பங்கைச் சேர்ந்தவருமான செபஸ்தியாம்பிள்ளை ரேசலின் தம்பதிகளின் புதல்வராவார். இவர் தமது ஆரம்பக் கல்வியை யாழ்.புனித சால்ஸ் மகாவித்தியாலயம், மாத்தளை இந்துமகாவித்தியாலயம் மாத்தளை புனித தோமையர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார் இவர் யாழ். ஆசனக்கோயில் புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணிப்பாளர் சபையிலும், அரியாலை புனித யூதாததேயு ஆலய பாடகர் குழுவிலும் ஞானப்பணி புரிந்து மாத்தளை மரியாயின் பிரான்சிஸ்கன் துறவிகள் சபையில் ஞானப்படிப்பை மேற்கொண்டார்.

இவர் யாழ்மறைமாவட்ட ஆசனக்கோவில் பங்கில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது பிரான்சிஸ்கன்சபையில் பணிபுரிந்து வருகிறார்.

## இரத்த...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குக் கொண்டு சென்றோம். அங்கு அவரைப் பரிசோதித்த டாக்டர் அவர் இறந்துவிட்டதாகக் கூறினர். சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்றபோது இறந்தவர் கதைக்கக் கூடியநிலையில் இருக்கவில்லை. இறந்தவரை நீண்டகாலமாகத் தெரியும். அவர் ஒருபலசரக்கு கடை வீட்டில் வைத்திருக்கிறார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. த. அருச்சுனன் சாட்சியத்தினை நெறிப்படுத்தினர். பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. சி. விஜயசூரியா வழக்கை நடத்தினர். எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி திரு. பாலசுப்பிரமணியம் ஆஜரானர்.

## தொண்டமானறு

# நன்னீரேரித்திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும்

### அமைச்சர் காமினி உறுதி

(புலோலி)

தொண்டமானறு நன்னீரேரித்திட்டம் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படுமென காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தியமைச்சர் திரு. காமினி திசநாயக்கா உறுதியளித்துள்ளார்.

நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் தொண்டமானற்றுப் பகுதிக்கு விஜயம் செய்துதிட்டத்தையும் பார்வையிட்டபோதே இவ்வுறுதியையளித்தார்.

இங்கு வருகை தந்த அமைச்சர் காமினி திசநாயக்கா, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன், அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் ஆகியோர் தொண்டமானற்றிலிருந்து செல்வச்சந்நிதி ஆலயம் வரை மேளதாள வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆலயவாசலில் வைத்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலுவும் மக்களும் மாலைகளும், பொன்னாடைகளும் போர்த்தி வரவேற்றனர்.

தொண்டமானறு அணை, நன்னீரேரித்திட்டம் என்பனவற்றையும் அமைச்சர்பார்வையிட்டார். மயிலிட்டி, காங்கேசன்துறை ஐ. தே. கட்சிக் கிளையினர் பருத்தித்துறை ஐ. தே. கட்சி நகராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். வி. சந்திரசேகரம் தலைமையில் வரவேற்பளித்தனர்.

### காங்கேசனில் வரவேற்பு

அமைச்சர் காங்கேசன்துறை துறைமுகத்தையும் சென்று பார்வையிட்டார். காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வருகை தந்த அமைச்சரை துறைமுக ஊழியர்கள் மாலைகள் அணிவித்து வரவேற்றனர். இதனையடுத்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினர் அமைச்சருக்கு காங்கேசன்துறை கெஸ்ட்கவுசில் மதிய போசன விருந்துபசாரமளித்தனர். (கு)

## கமலத்தை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மிடையேயான காதல் எவ்வளவுகாலம் நீடித்தது? எனக்கும் கமலத்திற்கும் 3 மாதங்களாகக் காதல் இருந்தது எமது காதல் முறியவில்லை.

சட்: நீர்பயணம் போனபோது பஸ்நிலையத்திற்கு வந்த மோகன் கமலம் இறந்தது பற்றி ஏதாவது சொன்னரா? இல்லை.

சட்: நீர் வராத்துப்பளை ஆனைவிழுந்தானுக்குப் போயிருக்கிறீரா? ஒருநாளும்போகவில்லை,

சட்: ஆனைவிழுந்தான் எங்கே இருக்கிறது என்று தெரியுமா? தெரியாது.

சட்: கமலம் இறந்தபின் அவரது வீட்டிற்குச் சென்று அனுதாபம் தெரிவித்தீரா? வீடுதெரியாதபடியால் அங்கு போகவில்லை. (கு)

## மொஸ்கோ பயணமானர்



(கொழும்பு)

செல்வன் சிவஞானம் நகுலேஸ்வரன்(பாபு) மொஸ்கோ பயணமானர். இவர் இலங்கை வானெலி தமிழ்ப்பகுதி நிகழ்ச்சிக்கட்டுப்பாட்டாளர் திரு. வே. அ. சிவஞானம் திருமதி சிவஞானம் ஆகியோரின் இளைய மகனுவார். இவர் இலங்கை உயர்கல்வி அமைச்சினுலும், ரஷ்ய அரசாங்கத்தினுலும் வழங்கப்பட்ட புலமைப்பரிசிலைப் பெற்றுள்ளார், பொறியியல் துறையில் உயர் கல்வியை ஆறு ஆண்டு காலம் மொஸ்கோவிலுள்ள "லுமும்பா சர்வகலாசாலை"யில் கற்பார். இவர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், க. பொ. த. ப. உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவருமாவார். இவர் மாணவராயிருந்த காலத்தில் கல்லூரி நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் பங்கு கொண்டதுடன் சிரேஷ்ட மாணவர் தலைவராகவும், இலக்கிய மன்றத் தலைவராகவும், நாடகமன்றம், விஞ்ஞானக்குழு போன்றவற்றின் அங்கத்தவராகவும் கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரம்நாட்டு இயக்கம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சகல கிராமங்களிலும் மரம்நாட்டு வைபவம் ஒன்றை இம்மாத இறுதியில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது. (கு)

## நீடிப்பு

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினுல் வட்டுக்கோட்டை வரை நடாத்தப்பட்டுவந்த பஸ்சேவை அராலி வரை நீடிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களின் நலன்கருதி இப்பஸ்சேவை நீடிக்கப்பட்டதாக பருத்தித்துறைசாலை அத்தியட்சகர் திரு. வி. கிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார். (கு)

**ஸ்ரீதர்** - யாழ். நகர் கடந்த சிலவருடங்களாக புரட்சிநடிகரின் திரைப் படங்களைப் பார்க்காத ரசிகப்பெருமக்களுக்கு, ஓர் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தத் தோன்றுகிறேன்.



புரட்சி நடிகர்
எம். ஜி. ஆர்.
கவர்ச்சிக்கன்னி
லதா
மற்றும்
நம்பியார், நாகேஷ்
தேங்காய்சீனிவாசன்,
நிர்மலா, மனோரமா,
ஆகியோர் திறம்பட
நடித்தது
சிறந்த டைரக்டர்
ஸ்ரீதர்
கைவண்ணத்தில்
உருவாகிய
வண்ணப்படைப்பு

**மீனவ நண்பன்**
இசை: M S விஸ்வநாதன்

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**தாய்க்கு ஒரு பிள்ளை**

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் -
படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து
அறுபதுவரை

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 4-45, 7-15, 9-45
**At the Earth's Core**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 வீத கழிவு சில
தினங்களுக்கு வழங்கப்படும்

**HONDA N. C. 50
PALADIN**

பெண்களுக்காக
இறக்குமதி செய்யப்பட்டது

**பல்க்கன் ஏஜென்சி**
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

### திருட்டு நபர் கிளிநொச்சியில் கைது

(புலோலி)

பலதிருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிசாரினால் தேடப்பட்டுவந்த நபரொருவர் கிளிநொச்சிப்பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

இந்நபர் கிளிநொச்சியில் இருப்பதாகப் பொலிசாருக்குத் தகவல்கிடைத்ததையடுத்து இவரைத் தேடிய பொலிசார் கிளிநொச்சியில் வைத்துக் கைதுசெய்தனர்.

நவராத்திரிகாலத்
தேவி வழிபாடு

| | |
|---|---|
| தேவி தோத்திரத் திரட்டு | 1-50 |
| நவராத்திரிப் பாமாலை | 1-00 |
| சகலகலாவல்லி மாலை | 50 |
| அபிராமி மகிமை | 2-50 |
| அபிராமியந்தாதி | 1-75 |
| அபிராமி அம்மை பதிகம் | 75 |
| மாரியம்மன் தாலாட்டு | 1-75 |

**காந்தளகம்**
213 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## "எமதுஒற்றுமையின்மையை அரசு சாதகமாக்குகிறது"

### மன்னாரில் 'அமிர்' பேச்சு

(மன்னார்)

"எமது இயக்கத்திற்கெதிராக சமீபத்தில் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதன் பின்னணி நோக்கம் என்ன என்பதை நாம் நன்கு ஆராய வேண்டும். எம்மிடையே ஒற்றுமையில்லாததை அரசாங்கம் தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்கிறது. நமது முன்னைய தலைவர்கள் ஒற்றுமையில்லாது பிரிந்து பிரிந்து செயல்பட்டதாலேயே நாம் இன்று பின்தங்கிய நிலையில் இருக்கிறோம்"

இவ்வாறு மன்னார் விளையாட்டரங்கில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தலைமையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினார். இக் கூட்டத்தில் திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் திருமதி. சூசைதாசன், திருமதி. லோகேஸ்வரன் யாழ்ப்பாண எம். பி. திரு. யோகேஸ்வரன் வவனியா எம். பி. திரு. ரி,சிவசிதம்பரம் திருமலை எம்.பி, திரு, சம்பந்தன் வண்ணை ஆனந்தன் சட்டத்தரணி திரு. புதுமைநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திரு, அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் எமது ஒற்றுமையைக்குலைக்க தென்னிலங்கையில் உள்ள சில கட்சிகள் பல திட்டங்களைத் தீட்டுகின்றன. எம்முடனிருந்த சிலரை தம்முடன் சேர்த்துக் கொண்டார்கள்.

'இலங்கையில் 72 உதவி அரசாங்க அதிபர்கள் சேவையாற்றுகிறார்கள். இவர்களில் 60 பேர் சிங்களவரும் 12 பேர் மட்டுமே தமிழர்களாவர்.

எமது இயக்கத்தை நாம் துச்சமாக மதித்திருந்தால் எங்களுக்கும் 5 மாவட்ட அமைச்சர் பதவி கிடைத்திருக்கும். தமிழ் மக்கள் எமக்கிட்ட கட்டளையை நிறைவேற்றியே தீருவோம். அரசாங்கம் எங்களுக்குப் பதவிகளைத் தந்து எம்மை விலைக்கு வாங்கமுடியாது. தமிழ் ஈழமே எமது கொள்கை. இதிலிருந்து நாம் மாறவேமாட்டோம். ஆனல் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்பதால் எமது மாவட்டங்களுக்கு நன்மையுண்டு. அதனுல்தான் நாம் அதை ஏற்றுள்ளோம்' என்றார். (ஈ)

## தமிழ்நாடு சபாநாயகர் இலங்கை வருகிறார்

(நெல்லியடி)

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு. கே. ராஜாராம் இம்மாதம் 16-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகருக்கு விருந்தளித்து கௌரவிக்க தமிழர்விடுதலைக் கூட்டணி ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

## கிராமியமீளமைப்பு உதவி

(மாவிட்டபுரம்)

மலசல கூட வசதிகளற்ற பாடசாலைகளில் அவற்றை அமைக்க 80 வீத உதவியளிப்பதற்கு இலங்கை கிராமிய மீளமைப்புநிறுவனம் முன் வந்துள்ளது.

வடமாநிலத்தில் இன்று பல பாடசாலைகளில் மல சல கூட வசதிகள் இல்லாமலிருப்பதாலும், சில பாடசாலைகளில் போதாமல் இருப்பதாலும் மாணவர்களது சுகாதாரம் பாதிக்கப்படுவதை கவனத்தில் கொண்டு இந்த உதவியை அளிக்க இந்நிறுவனம் முன் வந்துள்ளது.

## வைத்திய பேராசிரியர் குழு இன்று யாழ். வருகை

(மாவிட்டபுரம்)

யாழ். மாவட்ட மக்களை அதிகமாகப் பாதிக்கும் நோய்கள், அவற்றுக்கான காரணிகள் அவற்றை தீர்க்கும் வழிமுறைகள் என்பன பற்றி ஆராய்ச்சி செய்ய பேராதனைப் பல்கலைக்கழகவைத்தியத்துறை பேராசிரியர்களைக் கொண்ட குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியத்துறை பேராசிரியரான திரு. பின்ரோ தலைமையிலான குழு தென் பகுதியில் இதுவரை தனது ஆராய்ச்சியை நடத்திவந்து தற்போது யாழ்ப்பாணத்தில் ஆராய்ச்சிகளை நடத்த முன்வந்துள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும் கிராமமொன்றை தேர்ந்தெடுத்து அங்குள்ள சிறுவர் முதல் வயோதிபர் வரை சகலரது உடல் நிலை, நோய்கள் என்பவற்றை ஆராய்ந்தறியும் இந்த குழுவினர் யாழ். மாவட்டத்தில் காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள வீமன்காமம் கிராமத்தை முதலாவதாக தெரிவுசெய்துள்ளனர்.

வீமன்காமம் இளைஞர் முன்னேற்ற சங்க மண்டபத்திலும் வீமன்காமம் காந்திஜிசனசமூக நிலையத்திலும் இந்த குழுவினர் இன்று முதல் 10ம் திகதி வரை அக்கிராம மக்களைப் பரிசோதனை செய்து ஆய்வுகளை நடாத்துவார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரனும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பிரிவு டாக்டர். நரேந்திரனும் செய்துள்ளனர்.

தற்போது சுகாதார பரிசோதகர் திரு. வீ. க. சிங்கராசா தலைமையில் மருத்துவ மாதர்களும் வீமன்காமம்கிராமத்தில் இந்த ஆய்வுகளுக்கான முன்னேற்பாடுகளை செய்து வருகின்றனர்.

## கப்பல் சேவை துரிதம்

(மன்னார்)

இலங்கை இந்திய பிரயாணிகளின் தொகை அதிகரித்துள்ளதாலும் காலநிலை சீர்கேடு காரணமாக இம்மாதம் 16-ம் திகதி முதல் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் சேவை நிறுத்தப்பட விருப்பதாலும் தற்போது விசேட மேலதிக கப்பல் சேவை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னாருக்கு வந்த கப்பல் அதிகாலை 2மணிக்கு பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ராமேஸ்வரம் சென்றது. சனிக்கிழமை காலையில் மீண்டும் பிரயாணிகளுடன் வந்த கப்பல் அன்றைய தினமே பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு ராமேஸ்வரம் சென்றது.

இலங்கைக்கு வருவதற்கென ராமேஸ்வரத்தில் ஏராளமான பிரயாணிகள் காத்திருப்பதாக அறியப்படுகிறது.

## ஆயுதம் தரிந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற இப்பரபரப்பூட்டும் சம்பவத்தின்போது 14 ஆயிரம் ரூபா பணமும், 4 டண்டல் சிகரட்டும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

செட்டிகுளத்திலிருந்து வந்து கொண்டிருந்த சிகரட் விற்பனை வானை கட்டை ஒன்றை வீதிக்குக் குறுக்கே போட்டு வழிமறித்த கொள்ளையர்கள் நால்வர், கத்தி,ரிவோல்வர் போன்ற பயங்கர ஆயுதங்களைக்காட்டி பாவற்குளத்துக்குக் கடத்திச்சென்று அங்கே விட்டுவிட்டு பணத்தையும் சிகரட்டையும் கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

இச்சம்பவத்தின்போது சிகரட் வானின் விற்பனையாளர் கத்திக்காயத்துக்குள்ளானர். வவனியாப் பொலிசார் தீவிர விசாரணை நடாத்திவருகின்றனர்.

### மற்றுமொரு கொள்ளை

செட்டிகுளத்திலிருந்து பாவற்குளம் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியொன்றிலும் இருவர் ஆயுதங்களைக் காட்டி 525 ரூபாவை கொள்ளையடித்துள்ளனர்.

ஒரேயொரு பிரயாணியுடன் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியில் உறுக்குளத்திலிருந்து ஏறிய இருவர் ஆயுதங்களைக் காட்டி கண்டக்டரிடமிருந்து 360 ரூபாவையும் சாரதியிடமிருந்து 105 ரூபாவையும் பிரயாணியிடமிருந்து 60 ரூபாவையும் கொள்ளையடித்துச்சென்றனராம். (ஈ-கு)

## காணமற்போன சைக்கிள்களை கண்டுபிடிக்க உதவுங்கள்

'ஈழநாடு' இதழில் வாரம் இருமுறை திருட்டுப்போன சைக்கிள்கள் பற்றிய விபரம் தொடர்ந்து வெளிவரும். இந்தப் பட்டியலில் வெளிவரும் இலக்கங்களைக் கொண்ட சைக்கிள்களைக் கண்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிசார் பொதுமக்களைக்கோரியுள்ளனர்.

| சைக்கிள் இல: | | திருட்டுபோனஇடம்: | திகதி: |
|---|---|---|---|
| 75 L 1505 | (றயம்) | சாவகச்சேரி | 8-3-80 |
| DL 21293 | (றலி) | யாழ்ப்பாணம் | 10-3-80 |
| DL 53733 | (றலீ) | கரவெட்டி | 14-3-80 |
| CZ 1902 | (றலி) | மருதனமடம் | 16-3-80 |
| BR 86187 | (றலி) | யாழ்ப்பாணம் | 18-3-80 |
| RA 5263 | (ரேட் மாஸ்டர்) | சாவகச்சேரி | 20-3-80 |
| 69 E 606 | (றலி) | யாழ்ப்பாணம் | 21-3-80 |
| 68 K 242 | (றலி) | காங்கேன்துறை | 22-3-80 |
| AR 25797 | (றலி) | மயிலிட்டி | 30-3-80 |
| 70 L 743 | (றலி) | பண்டத்தரிப்பு | 30-3-80 |
| DT 8525 | (ரேட்மாஸ்டர்) | யாழ்ப்பாணம் | 30-3-80 |
| 74 L 866 | (றயம்) | கொக்குவில் | 30-3-80 |
| EE 9244 | (ஈஸ்ரேன்) | ஊர்காவற்றுறை | 1-4-80 |
| EO 1058 | (றட்ச்) | யாழ்ப்பாணம் | 7-4-80 |
| DI [illegible]073 | (ரேட் மாஸ்டர்) | சுன்னகம் | 3-4-80 |
| EQ 1104 | (றலி) | யாழ்ப்பாணம் | 7-4-80 |
| DL 64278 | (றலி) | கைதடி | 8-4-80 |
| 71 O 0 97 | (றலி) | சாவகச்சேரி | 12-4-80 |
| HC 0763 | (ஹீரோ) | காங்கேசன்துறை | 14-4-80 |
| RM 3917 | (ரேட்மாஸ்டர்) | ஊர்காவற்றுறை | 14.4-80 |
| 74 G 186 | (றலி) | ஊர்காவற்றுறை | 14-4-80 |
| 68 H 2181 | (றலி) | யாழ்ம்பாணம் | 15-4-80 |
| O 1912 | (றலி) | ஊர்காவற்றுறை | 17-4-80 |
| R[illegible] 145 | (றலி) | சாவகச்சேரி | 18-4-80 |
| BN 58536 | (றலி) | சாவகச்சேரி | 18-4-80 |
| [illegible] 1339 | (றலி) | கோண்டாவில் | 19-4-80 |
| IG 0995 | (பிளையிங் பிஜன்) | கோண்டாவில் | 19-4-80 |
| AI 4058 | | நல்லூர் | 22-4-80 |

(செவ்வாய்க்கிழமை தொடரும்)

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ° உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
° அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ° பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No GE 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone. 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org